திருப்பாவைச் சிறப்பு

[illegible]

O23:38 2111
N22
178155

# திருமயிலைச் - - - சிறப்பு



1 5SEP 1 2

விவேக போதினி ஆபீஸ்,
மயிலாப்பூர்,
சென்னை.

All Rights Reserved

# திருமயிலைச் சிறப்பு

(அழகிய ஆப்டோன் படங்களுடன்)

1 5 SEP 1922

ஆ. ஸீ. கஸ்தூரிரங்கய்யர், பி.ஏ., எல்.டி.,

புதிய பதிப்பு

காபிரைட்]

[விலை அணா 4

The Viveka Bodhini Series No. 30.

Printed at the Commercial Press, Madras, S.E.


Copyright by the Viveka Bodhini Office Mylapore, Madras.

# விஷய அட்டவணை


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| 1. அறுபத்துமூவர் உத்ஸவம் | 5 |
| 2. பார்வதிதேவி மயிலுருவம் நீங்கியது | 20 |
| 3. வாயிலாநாயனார் சரித்திரம் | 22 |
| 4. திருவள்ளுவர் சரித்திரம் | 28 |
| 5. பேயாழ்வார் சரித்திரம் | 35 |


## சித்திரப் படங்கள்


1. திருமயிலை திருக்குளக் காட்சி
2: திருவள்ளுவ நாயனார்
3. திருவள்ளுவ நாயனாரது
   பத்தினி வாசுகியம்மன்



திருமயிலை திருக்குளக் காட்சி

# திருமயிலைச் சிறப்பு

## 1. அறுபத்துமூவர் உத்ஸவம்

திருமயிலை அல்லது மயிலாப்பூர் என்பது சென்னப்பட்டணத்தின் தென்புறத்தில் கடற்கரை ஓரமாக இருக்கும் ஒரு பாகம். இதில் பட்டணத்து வக்கீல்கள் அநேகர் வசிக்கின்றனர். இங்குப் பெரிய பணக்காரர்களும், சாதாரணமாகத் தமது வரவிற்கும் செலவுக்கும் சரியாகப்போகும் ஜனங்களும் அதிகமே ஒழிய, நடுநிலைமையிலிருப்பவர்கள் அதிகமில்லை. இப்படி இருப்பினும், இந்தப் பாகத்திற்கு விசேஷம் இதன் கோயிலே. கபாலீசுவரரும், கற்பகவல்லியும் இங்குத் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்றனர். இங்குப் பகவான் மேற்கு நோக்கி இருக்கின்றார். கோயிலின் மேற்குப் புறத்தில் ஒரு பெரிய திருக்குளம் இருக்கின்றது.

இந்த ஸ்தலத்திற்கு அநேகவிதமான மஹாத்துவங்களுண்டு. இங்குதான் அம்மன் (பார்வதீதேவி) மயிலாயிருக்கும்படி நேர்ந்தகாலத்துப் பரமசிவத்தைப் புன்னை

மரத்தடியிற் பூஜித்து மயிலுருவம் நீங்கிப் பகவானோடு சேர்ந்தது. (இது பிரமோத்ஸவத்தில் இங்கு முதல்நாள் இரவு கொண்டாடப்பட்டு வருகின்றது). இங்குதான் அறுபத்து மூவருள் ஒருவரும், மானஸபூஜையாலேயே பரமபதம் பெற்றவருமாகிய வாயிலா நாயனர் அவதரித்து வித்திபெற்றது.

இங்குதான் திருக்குறள் செய்தவராகிய மஹா ஞானியான திருவள்ளுவநாயனர் அவதரித்து வாழ்ந்தது. திருமயிலை கிழக்குக்கோபுரத்திலிருந்து நேரே வடக்கேபோகும் பாதையே போனல், அது ஒரு பெருமாள்கோயில் பின்புறமாகப் போகும். அது தாண்டியதும், பாதைக்கு மேல்புறம் காணப்படும் ஒரு சிறு கோயிலே திருவள்ளுவர் கோயில். வைஷ்ணவ மரபின் படி நோக்கினும், இது திவ்விய ஸ்தலந்தான். முதலாழ்வார் மூவருள் பேயாழ்வார் பிறந்து பரமபதம் பெற்றதும் இங்கேதான். ஆழ்வார்கள் பாடல்கள் நாயன்மார் பாடல்கள் இவைகளிலிருந்து, அவர்கள் காலத்தில் இம்மயிலை சிறப்புவாய்ந்த பட்டணமாக இருந்ததென்றும், இவ்வூர் இரதவீதியில், உத்ஸவகாலங்களில் தரிசனம் செய்யவரும் அடியார்களுக்கும் கோயிலுக்கும் உபயோகப்படும்படியான அநேக சத்திரங்கள் நடைபெற்றுவந்தன என்றும் தெரியவருகின்றன.

இந்தத் திருமயிலையில் வருஷம் ஒருமுறை பங்குனி உத்தரத்தை ஒட்டி ஒரு பிரமோத்ஸவம் நடந்து வருகிறது. அதில் எட்டாம் திருநாளுக்கே அறுபத்து மூவர் உத்ஸவம் என்று பெயர். அன்று பகவான் அறுபத்து மூன்று நாயன்மாரோடு மாலை 3-மணிக்குத் திவ்ய ஸேவை அளிப்பது வழக்கம். இந்த உத்ஸவம் மிகுந்த



கோலாஹலமாக, அநேக ஜனங்களால் தரிசிக்கப்பட்டும், இவ்வூரை மிகச் சிறப்புற்று விளங்கும்படியாகச் செய்யும் தர்மங்கள், விசேஷ ஐதிகங்கள் முதலியவைகளோடு சம்பந்தப்பட்டும் இருப்பதால் இதைப்பற்றி யாவரும் நன்றாகக் கூடியவரையில் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஆதலால் இதை இங்கு எடுத்து விவரிக்கலானோம்.

இவ்வுத்ஸவத்தோடு சம்பந்தப்பட்டிருக்கும் பெரிய புராணக்கதை பின்வருவது:—பார்வதீ தேவியிடமிருந்து ஞானப்பால் உண்டு, உலகில் ஸன்மார்க்கத்தை நிலைநிறுத்திய ஸ்ரீ ஸுப்ரமண்யர் அவதாரமாகிய திருஞானசம்பந்த ஸ்வாமிகள் காலத்தில், திருமயிலையில் வைச்யர்குலத்தில் சிவநேசச் செட்டியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பெயருக்கேற்றபடி அவர் சிவபெருமான் சிவனடியார்கள் ஆகிய இவர்களிடம் பக்தி செலுத்தி ஸதா பரிசுத்தராக இருந்தார். இவருக்குப் பணமும் ஏராளமாக இருந்தது. இவர் திருஞானசம்பந்த ஸ்வாமிகள் செய்த திவ்யச் செயல்கள், ஸன்மார்க்க ஸ்தாபனஞ்செய்த வழிகள் முதலியவைகளைக் கேள்விப்பட்டு அவரிடம் சிறந்த அன்புபாராட்டிவந்தார். ஆனல் அவரைப் பார்க்க மாத்திரம் செட்டியாருக்கு சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஒவ்வொரு நாளும் செட்டியாரிடம் வந்து எட்டும் திருஞான சம்பந்தரது அற்புதச் செய்கைகளெல்லாம், அவருக்கு சம்பந்தர் மேலிருந்த அன்பை அதிகப்படுத்தின.

இப்படியிருக்கையில் இவருக்கு வெகு காலத்திற்குப்பின், பூம்பாவை என்றொரு அருமைப் பெண் பிறந்தாள். இவள் சிவபக்தி மிகுந்தவளாய், வளர்ந்து

வருநாளில் திருஞானசம்பந்தரது அற்புதச் செயல்களில் அநேகம், சிவநேசச் செட்டியார் காதில்வந்து எட்ட, ஆநந்த பரவசத்தில் அவர் தம் பெண், சொத்து முதலியவைகள் எல்லாவற்றையும் சம்பந்தஸ்வாமிகளுக்கு அர்ப்பணம்செய்தனர். இவ்வாறு இவர் சம்பந்தஸ்வாமிகளின்மீது அன்புவளர்த்து வரும்நாளில், இவர் அருமைப்பெண் பூக்கொய்ய தோட்டத்திற் போனவிடத்துப் பாம்பு கடித்து இறந்தாள். சிவபக்தி விஷயத்தில் தம் பெண்ணிடமிருந்த பற்றால், செட்டியார் சற்றுத் துக்கித்துவிட்டுத் தம் பெண்ணைத் தகனஞ்செய்து சம்பந்தஸ்வாமிகள் திருமயிலைக்கு வருங்கால் அவர் பாதத்தில் அவள் எலும்பை அர்ப்பணம் செய்வதாக எண்ணி, அதை ஒரு பானையில் இட்டு அதையே தமது பூம்பாவையாகப் பாவித்துத் தகுந்த மரியாதைகள் செய்துகொண்டுவந்தார்.

இவ்வாறு கொஞ்சநாளாக, திருமயிலைக்கு வடக்கிலுள்ள திருவொற்றியூரில் ஸ்வாமிதரிசனத்திற்காக சம்பந்தஸ்வாமிகள் எழுந்தருளியிருப்பதாகச் செட்டியாருக்குச் சமாசாரம் எட்டியது. உடனே அவர் சம்பந்தஸ்வாமிகளுக்குத் தகுந்த மரியாதைகள் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, அவரை எதிர்கொண்டழைத்து வர அவர், திருவொற்றியூரை நோக்கிப் புறப்பட்டார். இதற்குள்ளாக சம்பந்தஸ்வாமிகளும் திருமயிலை நோக்கிப் புறப்பட்டார். இருவரும் வழியில் சந்தித்தனர். செட்டியார் ஆநந்தபரவசராகிக் 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்துவிட்டதே'



என்று மனங்களித்தார். இருவரும் வார்த்தையாடி வருகையில் செட்டியார் தம் பெண்விஷயத்தை முழுவதுஞ்சொல்லி அவள் எலும்பைக் கிருபைகூர்ந்து அங்கீகரிக்க வேண்டுமென்று சம்பந்தஸ்வாமிகளை வேண்டிக்கொண்டார். இதைக் கேட்டுக்கொண்டு சம்பந்தஸ்வாமிகள் மயிலை வந்துசேர்ந்து, ஸ்நானம் முதலியவைகளை முடித்துக்கொண்டு கபாலீசுவரரைச் செட்டியாருடன் சென்று தரிசித்து ஸந்நிதியில் வந்து, செட்டியாரை நோக்கி, அவர் பெண் எலும்பைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்.

செட்டியார் அந்த எலும்புப் பாத்திரத்தைப் பல்லக்கில் ஏற்றிச் சீர்முதலியவைகளோடு எடுத்துவந்து பகவத் ஸந்நிதானத்தில் வெளியில் கொண்டுநிறுத்தினார். அப்பொழுது அங்குச் சிவபக்தர்கள் எல்லோரும் வந்துகூடினர். ஆகாயத்தில் தேவர்கள் முதலியோர் எல்லோரும் வந்துகூடினர். எல்லோரும் மிகுந்த ஆவலுடன் என்னநடக்கப்போகிறதென்றுகண்கொட்டாது பார்த்துக்கொண்டிருக்கையில், சிவபிரானை மனதிலே தியான மூலமாக அமைத்துக்கொண்டு அந்த பலத்தால், "சிவனடியார்களுக்குத் தொண்டுசெய்தலும், சிவபெருமான் திருவிழாக்கண்டு ஆநந்தித்தலுமே, துர்லபமான மானிடப்பிறவியின் பயனென்பது உண்மையாகில், இப்பூம்பாவை உயிருடன் எழட்டும்" என்று சபதம் செய்துகொண்டு சம்பந்தஸ்வாமிகள் பின்வரும் பதிகத்தைப் பாடியருளினர்.

## * திருமயிலாப்பூர்—பூம்பாவாய் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரமமர்ந்தா
னொட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். 1

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச்சரமமர்ந்தா
னைப்பசி யோண விழாவு மருந்தவர்க
டுய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய். 2

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகிற்
றுளக்கில் கபாலீச் சரத்தான்றேல் கார்த்திகைநாட்
டளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய் 3

ஊர்த்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனிற்
கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தா
னாதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய். 4

---

* இப்பதிகத்தில் 2-ம் பாட்டு முதல் 10-ம் பாட்டுவரையில் ஒவ்வொரு பாட்டிலும் மயிலாப்பூரில் ஒவ்வொரு பருவத்திலும் முன்னர் நடந்துவந்த உத்ஸவங்கள் ஒவ்வொன்றையும் பற்றிக் கூறியிருக்கிறது. இப்பாகங்களையெல்லாம் தடித்த எழுத்தில் இங்கு அச்சிட்டிருக்கிறது. இவைகளுள் 3-முதல் 7-பாட்டுகள்வரையிலுள்ள உத்ஸவங்கள், இப்பொழுதும் நடந்துவருகின்றன. இவைகளுள் 7-ம் பாட்டிற் கூறப்பட்டிருக்கும் ஒலிவிழாவாகிய பங்குனி உத்தர விழாவே இவ்வூர் பிரமோத்ஸவம். இதில் பிக்ஷாண்டார் வேஷம் (பலிவிழா) மிகமுக்கிய உத்ஸவம் என்று தெரியவருகிறது. இங்குப் போற்றப்பு என்பது பொன் சங்கிலியுடைய ஊஞ்சல் உத்ஸவம் என்று சிலரும் பெருஞ்சாந்தி என்பது திருக்கல்யாண உத்ஸவம் என்று சிலரும் கூறுவர்.



மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தா
னெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடுந்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய். 5

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தா
னடலானே றூரு மடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய். 6

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்தரநா
ளொலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய் 7

தண்ணா வரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரமமாந்தான்
பண்ணார் பதினெண் கணங்கடம் மட்டமிநாட்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய். 8

நற்றா மரைமலர்மே லான்முகனு நாரணனு
முற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
போற்றப்புக் காணாதே போதியோ பூம்பாவாய். 9

உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போர்க்கு
மிருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டிற்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரத்தான்றன்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய். 10

திருச்சிற்றம்பலம்

இப்பாட்டுப் பாடிவருகையில் முதலில் பூம்பாவை உருவம் பெற்று, பின்னர் முறையே பன்னிரண்டு வயது வரையில் வளர்ந்து, முடிவில் மிகுந்த அழகிய உருவத்தோடு அவள் குடத்தைவிட்டு வெளிவந்தாள். எல்லோரும் கண்டு வியந்தனர். சிவநேசச்செட்டியார் ஆநந்த பரவசராகிச் சம்பந்த ஸ்வாமிகள் காலில் விழுந்து தாம் முன்னர்ச்செய்த பிரதிக்ஞைப்படித் தம் பெண்ணை சம்பந்தஸ்வாமிகளுக்கு அர்ப்பித்துக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். அதற்குச் சம்பந்த ஸ்வாமிகள் செட்டியாரை நோக்கி "நீர் இப்பூம்பாவையைப் பெற்றெடுத்ததால் அவளுக்குப் பிதா; அதுபோல இறந்த இவளை மறுபடி உயிரோடு எழும்படிசெய்த நானும் அவளுக்குப் பிதா வாகவேண்டும். ஆதலால் நான் அவளைக் கல்யாணஞ்செய்துகொள்வது தகுதியல்ல" என்று ஆக்ஷேபித்தார். செட்டியாரும் அவர் உறவினர்களும் மிகுந்த துக்கத்திற்கு ஆளாகித் தத்தளிப்பதைக்கண்டு, சம்பந்த ஸ்வாமிகள் வேதத்திலிருந்து நியாயம் காட்டி அவர்களைத் தேற்றி, திருமயிலைவிட்டு வேறு திருப்பதிகளைத் தரிசிக்கப் புறப்பட்டனர். சம்பந்த ஸ்வாமிகளுக்கென்று குறிக்கப்பட்டமையின் பூம்பாவையைச் செட்டியார் வேறொருவருக்கும் விவாகம் செய்து கொடுக்காம லிருந்துவிட்டார். பிறகு அவள் வாழ்நாள் முழுவதும் கன்னிகையாகவேயிருந்து பரமபக்த சிரோமணியாக விளங்கி, முடிவில் பரமபதம் பெற்றாள்.

இனி இக்கதையின் ஐதிகப்படி, மயிலாப்பூரில் எட்டாம் திருவிழாவன்று நடத்தப்படும் கோயில் காரியங்களை எடுத்துக்கூறுவோம். எட்டாம் திருவிழா



வன்று காலை 8-மணி சுமாருக்குத் திருஞானசம்பந்த ஸ்வாமிகள், கோயிலிலிருந்து எழுந்தருளி, இரதவீதி வழியே வந்து, பெரிய குளம் மேலண்டைக் கரையிலுள்ள படித்துறையில் போட்டிருக்கும் தென்னண்டைப்பந்தலில் இறங்குவார். இதற்குமுன்னமேயே சிவநேசச் செட்டியாரையும், குளத்துக்கு மேல்துறையிலிருக்கும் வடவண்டைப் பந்தலில் கொண்டுவந்து வைத்திருப்பார்கள். அன்று அதிகாலை சூரியோதயத்திற்கு முன்னமேயே, பூம்பாவையை அலங்கரித்துத் திரையால் மூடி, மேலண்டை வீதி வடக்கு மூலையிலுள்ள ஒரு பந்தலில் வைத்திருக்கும். ஞானசம்பந்தரும் செட்டியாரும் குளத்தில் ஸ்நானம் முதலியவைகள் செய்து சுவாமிதரிசனஞ்செய்யத் தயாராவதாகப் பாவனை. உடனே அவர் விக்கிரஹங்களுக்கு அபிஷேகம் அலங்காராதிகள் செய்யப்படும். இவைகள் எல்லாம் முடிய நடுப்பகல் ஒருமணியாகும். உடனே செட்டியாரும், சம்பந்த சுவாமிகளும் புறப்பட்டுக் கோயிலுக்குச்சென்று சுவாமிதரிசனம் செய்யப் போவார்கள். பின்பு மேலண்டைவீதி ஸ்வாமி ஸந்நிதிக்கெதிரில் வைக்கப்பட்டிருக்கும் பூம்பாவை விமானத்தருகில், செட்டியாருடன், சம்பந்தஸ்வாமிகள் வந்து நிற்பர். உடனே பூம்பாவைக்குரிய சீர்களெல்லாம், உள்ளூர் திருவண்ணாமலை மடாதிபதியால் எடுக்கப்பெற்று வந்து சேரும். பின்னர் கோயில் ஓதுவார், முறையே முன் எடுத்து எழுதியுள்ள பூம்பாவைத் திருப்பதிகம் பாடுவார். ஒவ்வொரு பாட்டு முடிந்ததும், சம்பந்தஸ்வாமிகளுக்குக் கற்பூரஹாரத்தி செய்யப்படும். பதிகம் முடிந்ததும் பூம்பாவை விமானத்தை மறைத்துள்ள திரை

கீக்கப்படும். பிறகு உள்ளிருக்கும் அலங்கரித்த பூம்பா
வை விக்கிரஹத்திற்கும் சம்பந்தசுவாமிகளுக்கும் தீபா
ராதனைநடைபெறும். இதன் பின்பு சம்பந்தசுவாமிகள்,
செட்டியார், பூம்பாவை ஆகிய மூவரும் புறப்பட்டுக்
கோயில்பக்கம் போக, அங்குக் கபாலீசுவரர் அறுபத்து
மூன்று நாயன்மாருடன் வந்துநிற்பர். மூன்று பெயர்
களும் கோயிலுள் சென்று மூலலிங்கத்தை ஆராதித்த
பின்னர்,உத்ஸவமூர்த்தியை வலம்வந்து எதிரே நிற்பர்.
பகவான், இம்மூன்றுபேர்கள் அறுபத்துமூன்று நாயன்
மார்கள் ஆகிய இவர்களுடன், மாலை மூன்று மணிக்குத்
திருமயிலை வீதியில் ஆநந்தபவனி புறப்படுவர். பூம்
பாவையை எழுப்புங்கால் சகல தேவதைகளும் அடி
யார்களும் வந்திருந்ததாகக் கூறியிருக்கும் கதையின்
படி நடத்தப்படும் ஐதிகம் இதுவே. இந்தத் திருவிழா
வன்று, ஸ்வாமி கோயிலுள்ளே சென்று இறங்குமுன்,
சூரியாஸ்தமனம் ஆகிவிடும். சென்ற பதினைந்து வருஷ
காலமாக, இவ்வூர் திருவள்ளுவர் கோயிலிலிருந்து திரு
வள்ளுவ நாயனரும் எழுந்தருளப் பண்ணப்பெற்றுக்
கபாலீசுவரர் பின்னர், இந்த எட்டாம் திருவிழாவன்று
64-ம் நாயனராக வந்துகொண்டிருக்கின்றனர்.

இத்திவ்ய உத்ஸவத்தைக்கண்டு ஆநந்திக்கவரும்
ஜனங்களைப்பற்றிச் சற்று விசாரிப்போம். இந்த உத்ஸ
வம் பார்க்கவரும் ஜனங்கள் சற்றேறக்குறைய 4-அல்
லது 5-லக்ஷத்திற்கு இருக்கும். இவர்கள் காலை சுமார்
9-மணி முதற்கொண்டு, மாலை 5-மணி வரையில் வந்து
கொண்டேயிருப்பார்கள். நடுப்பகல் 11-அல்லது 12மணி
க்குள் மயிலாப்பூர் நிறைந்துவிடும். 1 அல்லது 2-மணி
சுமாருக்கு மயிலைக்குள் வண்டிகளை விடுவதில்லை.
கூட்டம் அவ்வளவு அதிகமாகிவிடும். இந்த உத்ஸவத்



தில் நடைபெறும் விருஷபோத்ஸவம், பிக்ஷாடனர்
வேஷம் இவைகளில் நடக்கும் பாணவேடிக்கைகள்
இந்த எட்டாம் நாளில்லை. இந்த உத்ஸவம் இரதோத்
ஸவம்போல, காலையில் சீக்கிரம்முடிவதுமல்ல. இப்படி
யிருப்பதால் ஜனங்கள் அதிகமாகக் கூடுவதற்கு, பகவத்
தரிசனம் செய்யவேண்டு மென்கிற ஆவல்தான் கார
ணம் என்பது வெளியாகும். வரும் ஜனங்களுக்கு
என்ன வேலை என்பதைக் கூறுவோம். ஜனங்கள் வந்த
தும், கோயிலிலுள்ள மூலஸ்தானம்,அதன் எதிரிலிருக்
கும் மண்டபத்தில் வைத்திருக்கும் அறுபத்துமூன்று
நாயன்மார்கள், வெளியே புறப்பட அலங்கரித்துவைத்
திருக்கும் உத்ஸவமூர்த்திகள், ஞானசம்பந்தஸ்வாமி
முதலிய விக்கிரஹங்களுக்குத் தேங்காய் உடைத்துச்
செய்யவேண்டிய மரியாதைசெய்தல்; பின்னர் மயிலாப்
பூரில் அன்று நடைபெறும் தர்மசத்திரங்களில் போஜ
னம் செய்தல்; மாலை இரண்டுமணிக்குத் திருமயிலைப்
பதிகம் பாடி பூம்பாவையை ஆக்கியருளும் வைபவத்
தைக்கண்டு களித்தல்; பின்னர் 4-மணிக்கு ஆநந்த
பவனிவரும் ஸ்ரீகபாலீசுவரஸ்வாமியைக் கண்டு பரவச
மாதல் ஆகிய இவைகளே. அன்று உடைபடும் தேங்
காய்களுக்குக் கணக்கேயில்லை. அன்று மயிலாப்பூர்
வரும் பக்தர்களுக்கு, அன்று பகல்முழுவதும் பகவத்
விஷயமான தொழிலே இருக்கும். அன்றுவது, சற்றுத்
தமது லௌகிக விஷயங்களை மறந்துநிற்க,ஜனங்களுக்கு
சமயம் வாய்க்கும். ஸதா ஒருவருக்கொருவர் சம்பந்த
சுவாமிகள், பரமசிவம் இவர்களின் வைபவத்தையே
சொல்லிக்கொண்டு காலங்கழிப்பார்கள். இவ்வாறு பல்
லாயிரம் ஜனங்களை ஒரேகாலத்தில் உலகப்பற்றைச்

சற்று மறந்துநிற்கும்படி செய்யும் திறனுடையது இந்த திவ்ய உத்ஸவம்.

இனி இந்த எட்டாம்நாள் நடைபெறும் தர்மங்களைப்பற்றிக் கூறுவோம். இந்த உத்ஸவத்தன்று சுமார் நடுப்பகல் 12-மணிக்கு நாம் வெளியே புறப்பட்டுக் கூட்டத்தைக் கவனியாது, மயிலாப்பூர் இரதவீதியை ஒருதரம் சுற்றிவந்தால், அநேகவித தர்மங்களைக் கண்ணாரக்கண்டு களிக்கலாம். வீதிகளில் குளக்கரை ஓரமாகவருபவர், ஸ்வாமி புறப்பட்டு வரும்வரையில் தங்கி இளைப்பாறுவதற்காக விஸ்தாரமான அநேக தண்ணீர்ப் பந்தல்கள் ஏற்பட்டிருக்கும். மயிலாப்பூர், முற்காலத்தில் அநேக அன்ன சத்திரங்களை உடையதாக விருந்தது. அவைகளுள், காலத்தின் விசேஷத்தால் இப்பொழுது சிற்சிலதான் நடைபெற்று வருகின்றன. இவைகளில் சிலவற்றில் தரிசனத்திற்கு வரும் பிராமணர்களுக்கும், மற்றவைகளில் பிராமணரல்லாதாருக்கும், இதுபோல மற்ற ஜாதியார்களுக்கும் அன்று சமாராதனை நடந்துகொண்டேயிருக்கும். இவைகள் போதாவென்று வண்டிகளில் நீர்மோர், பானகம், தண்ணீர், வாழைப்பழம்,வெள்ளரிக்காய் முதலியவைகளைப் போட்டுக்கொண்டு கோயிலை வலம்வந்து ஜனங்களுக்கு ஒருதிறத்தார் இவைகளைக் கொடுத்துக்கொண்டு வருவார்கள். சர்க்கரை தருமம், சிறு புத்தக தருமம் இவை போன்ற அநேக சிறு சிறு தர்மங்கள் ஒவ்வொருவரும் ஆங்காங்கே தம்மால் இயன்றமட்டும் செய்வர். சிற்சில வீடுகளில் தண்ணீர்ப் பந்தல்களும் வைக்கப்பட்டிருக்கும். தரிசனத்திற்கு வருபவர் எடுத்துவரும் சிறு குழந்தைகளுக்குச் சுத்தமான பசும்பால் தருமம் ஓரிடத்



தில் நடந்துகொண்டிருக்கும். இவ்வாறு அநேகவித தர்மங்கள் ஆங்காங்கே, வீதி முழுவதும் ஓயாது அன்று நடந்துவரும். மேலும், மயிலாப்பூருள்ளே வந்துசேரும் அநேகபாதைகளில் சுமார் இரண்டு மூன்று மைல் தூரம் வரையில் அன்று தண்ணீர்ப்பந்தல்கள் காணப்படும். இவைகளை எல்லாம் உற்றுப்பார்த்து, செய்பவர்கள் இன்னாரென்று தெரிந்து பத்திரிகையில் பிரசுரம் செய்தால் ஒருபக்கம் முழுவதும் போதாது.

இத்தர்மங்களில் முக்கியமாக இரண்டு விஷயங்களை நாம் மறவாதிருக்கவேண்டும். இக்காலத்தில் சொத்திருப்பவர் தனித்தனியே தம் மனத்திற்குத் திருப்தி வரும்படி தர்மஞ்செய்வதென்பது குறைந்துகொண்டே வருகிறது. இக்காலத்தவர், தர்மத்திற்காகப் பணத்தைக் கொடுத்துத் தர்மகர்த்தர்களை ஏற்படுத்திவிட்டுத் தாம் தர்மம் செய்துவிட்டதாக இறுமாந்து,மற்றையவிஷயங்களில் தமது காலத்தைச் செலவிடுகின்றனர். இதனால் விளையும் தீங்குகள் பல. தர்மகர்த்தர்கள் குணவிசேஷத்தால் தருமத்திற்கு வைத்திருக்கும் பணம் குறையலாம். அதை நடத்துவதற்கு ஏற்படுத்தப்படும் சிப்பந்திகள், அதை மேலும் குறைக்கலாம். முடிவில் யாரை உத்தேசித்துப் பணம் வைக்கப்பட்டதோ அவர்களுக்குப் படிக்குப் பாதிதான் வந்து எட்டும். இதுவே இக்காலத்து சமூக தருமங்களின் கதி. தர்மம் செய்தலென்பது நமது சாஸ்திரப்படி பணம் கொடுப்பதோடு நின்றுவிடவில்லை. தர்மமானது செய்பவனையும், பெறுபவனையும் ஏககாலத்தில் மேன்மைப்படுத்துமாயினும், உற்று நோக்கின், ஒழுங்குப்படி பலனை உத்தேசிக்காது ஆராதனையாக எண்ணிச் செய்யப்படும் தர்மம், செய்பவனையே அதிக

மாக மேன்மைப்படுத்தும். ஆதலால் பணங்கொடுப்போன் அந்தத் தர்மத்தில் புகுந்து நடத்தவேண்டுவது முக்கியம். இம்மாதிரியாகப் பணங்கொடுப்போர் புகுந்து நடத்துவதை இந்த அறுபத்துமூவர் உத்ஸவங்களில் நடைபெறும் எல்லாத்தர்மங்களிலும் காணலாம். இரண்டாவது, இக்காலத்து மஹான்கள், தாம் நன்கொடையாக ஒரு விஷயத்திற்குக் கொடுப்பது பத்திரிகைகள் மூலமாக அங்கீகரிக்கப்பட்டு வெளிவருமாகில், அதிகமாகக் கொடுப்பது வழக்கம். இவ்வாறு அநேகருக்கு இக்காலத்தில் பெயரும்பதவியும் வந்திருக்கின்றன. இம்மாதிரியான ஒருவிதத்தாழ்ந்த கீர்த்தியையும்கருதாது ஒருவித கீர்த்தியும் வாராதென்பதை நன்கு தெரிந்துகொண்டு சுத்த மனதுடன் இந்த அறுபத்துமூவரன்று சகல தர்மங்களும் நடத்தப்பெறுகின்றன. எந்த தர்மம் செய்தபோதிலும்தனியாகப்பகவத்சம்பந்தமின்றிச் செய்யவே கூடாது. அவ்வாறுசெய்தால் வீண்கர்வமென்ற படுகுழியிலேயே மனிதனை அது வீழ்த்துமென்பது இதிலிருந்து விளங்கும். அந்தோ! இக் காலக்கொடுமையால் நடைபெறும் தர்மங்கள் யாவும் பலர்கூடிக் களம் பறிப்பதாகவும், பகவத் சம்பந்தம் அற்றதாகவும் இருக்கின்றனவே. இவைகளால் தருமம் செய்வோருக்கும், தர்மகர்த்தர்களுக்கும், தர்மம் சென்று சேர்வோர்களுக்கும் வீண்கஷ்டம் மாத்திரமே ஒழியப் பூர்ணபலன் ஒன்றும் கிடைப்பதாகக் காணேமே!

இவ்வளவு கோலாஹலமாக நடைபெறும் உத்ஸவத்தின் காரணமான கதை உண்மையா அல்லவா என்று இக்காலத்தவர் அநேகர் சங்கிக்கலாம். இம்மாதிரி சந்தேகம் பகவத் பக்தர்கள் மனதில் வாராது. வரினும்,



அவர் தம் மனோநிலை குறையாது, தம்மை ஒருவாறு திருப்திப் படுத்திக்கொள்வர். அவர்கள் மனத்தை இங்கு ஒருவாறு எடுத்துக் கூறுவாம். இக்காலத்திய பெரும்பாலாரும் இதைக் கவனித்துத் திருப்தியாக இருப்பின் சமாதானம் அடையலாம்.

உட்கருத்தை ஒட்டிநோக்கில் எல்லா அற்புதக் கதைகளும் உண்மைதான் என்பதற்குச் சந்தேகமில்லை. வெளிப்படையாக உள்ள விஷயங்களை ஒட்டி நோக்கினும் அவைகளுக்கும் சிறந்த சக்தியுண்டு. இந்த விஷயமாக **ரேனன்** என்ற குணதோஷ நிரூபகர் பின்வருமாறு கூறுகிறார். 'அஸாத்ய காரியங்களே பக்தியை உண்டாக்கி நிலைபெறச் செய்பவை. இவைகளைவிடச் சற்றுத் தாழ்ந்த விஷயங்கள் பக்தர்களுக்குத் திருப்தியை உண்டாக்கமாட்டா." இன்றைக்கும் நாளைக்கும் திரௌபதி ஐந்துகணவரை உடையவளாயினும், பதிவிரதைதான் என்று ஸ்திரப்படுத்த சில ஹிந்துக்கள் நிரூபிக்கின்றனர். இதுவுமல்லாமல் "நேரான உண்மையைவிடக் கட்டுக்கதையைப்போல் இருக்குங்கதை இவ்வாறு சிறந்த உண்மையாக இருக்கும்; இவ்வாறு அற்புதக்கதைகள் அவை குறிப்பிக்கும் கதாநாயகன் மகிமையாலேயே உண்டாவன; அவன் இல்லாவிடில் இத்தகைய அற்புத விஷயங்களை ஒருவராலும் சிருஷ்டிக்கவே முடியாது; அவனது மகிமைதான் அவனுடன் சம்பந்தப்படும் ஒவ்வொருவரையும் இவ்வாறு மேன்மைப்படுத்துமென்ற விஷயங்களை உணர்ந்தால்தான் சம்பந்தஸ்வாமிகள் அற்புதச் செயல்களைக் கண்டு வீண்சங்கைசெய்து கெட்டுப்போகாது, மூடநம்பிக்கையால் அறியாமையிலும் அழுந்தாது, மனச்சுத்தத்தோடு

அவைகளைக்கண்டு வியந்து எளிதில் பரமபதம் அடைவதிலேயே எவனுக்கும் கண்ணாய் இருக்கமுடியும். மேலும், இவ்விஷயமாகப் பின்வரும் அற்புதவாக்கியத்தையும் நாம் மறவாதிருக்கவேண்டும். "உண்மையான பக்தியின் சிறப்பு இன்னது என்பதே நமக்குத் தெரியாது. நாம் இப்பொழுதிருக்கும் சாதாரண நிலையிலிருந்து நோக்கினால், பக்தியின் வீர்யம், செழிப்பு, அபாரசக்தி ஆகிய இவைகள் நமக்கு நன்றாய் விளங்க மாட்டா. பக்திதான் மலையைத் தூக்குவதும், அலக்ஷ்யமாய்ப் பெரிய சமுத்திரங்களைத் தாண்டுவதும், பஞ்ச பூதங்களை அழிப்பதும், பிரபஞ்சத்தையே அசைப்பதும் ஆகிய அற்புதச் செயல்களுக்குக் காரணமாக இருக்கும். பக்தியால் ஆகாததொன்றில்லை. பக்தியால் ஒருவன் தொழில் செய்யுங்காலத்தில், அவன் ஆத்ம சக்தியே வெளிவருதலால், நடக்கும் தொழில் மிக அற்புதமாகத்தான் இருக்கும்."

எல்லா மவன்செயலே யென்றிருக்கும் வல்லார்க்
கில்லைகா ணாகாத திறையே பராபரமே.

---

## 2. பார்வதீதேவியார் மயிலுருவம் நீங்கியது

ஒருகாலத்தில் பரமசிவன் பார்வதீ ஸமேதராய் கைலாஸகிரியில் எழுந்தருளியிருக்கையில் அவரைத் தரிசிக்கத் தேவர்கள் எல்லோரும் வந்தனர்; அப்பொழுது அவரவர்கள் கூறிய குறைகளைக்கேட்டு அவரவர்களுக்குத் தகுந்த விஷயங்களைப் புத்திமதிகளாகக் கூறி அனுப்பிவிட்டார். இவர்கள் போனதும் பரமசிவம் பார்வதியை நோக்கி, 'உனக்கு விபூதி பஞ்சாக்ஷரம் இவைகளின் மகிமைகளை எடுத்துக் கூறுகிறேன்' என்று கூறி அவ்வாறு செய்யத் தொடங்கினார்.



'விபூதி', அணிபவர்களுக்கு மிகுந்த சிறப்பை உண்டாக்கும்; அவர்கள் பாபத்தையெல்லாம் நீக்கும். ஒரு ஊரில் ஒரு கொடிய அந்தணன் இருந்தான். அவனிடம் எல்லா மஹாபாதகங்களும் குடிகொண்டிருந்தன. அவன் ஒரு பறைச்சேரிவழியாகப் போகையில் அங்கு ஒரு ஸ்திரீயைக்கண்டு அவளிடம் ஆசை கொண்டான். அவள் நாயகன் ஒரே வெட்டாக இவனை வெட்டி இவன் தேகத்தைச் சேரிக்கு வெளியிலிருந்த புதரில் எறிந்துவிட்டான். அப் பிணத்தை ஒரு நாய் தின்னவந்து அதன்பேரில் ஏறிக்கொண்டது. இந்த நாய், ஸ்மசானத்தில் அலைந்துகொண்டிருந்ததால் இதன் கால்களில் அதன் சாம்பல் படிந்திருந்தது. இந்தச் சாம்பல் அந்தப் பிணத்தின்மேல் பட்டதும், அவன் திவ்யலோகம் பெற்றான்.

'நமச்சிவாயம் என்பது என் தேகமே. அது தான் இப்பிரபஞ்ச ரூபமாக இருப்பது. அதை ஓம் என்ற பிரணவத்தோடு உச்சரித்தால் ஒருவன் எளிதில் பரமபதம் பெறுவான்' என்றார். இவ்வாறு பகவான் கூறிவருகையில், அருகாமையில் வந்திருந்த ஒரு மயிலின்மேல் தேவியினது கருத்துச் செல்ல, பகவான் செய்த உபதேசம் அம்பிகை காதில் ஏறவில்லை. 'மறுபடி அதைக் கூறவேண்டும்' என்று அவள் பகவானைப் பிரார்த்திக்க, அவர் 'இந்த நல்ல சமயத்தில் உன் மனம் மயில்மயமாக இருந்ததால் நீ மயிலாகக்கடவாய்' என்று சபித்தார். சாபவிமோசனத்தைப்பற்றி விசாரித்தகாலத்தில் 'இப்பூவுலகில் பாலாறுக்கு வடபாகத்தில் கபாலிபுரமென்ற ஒரு பட்டணமுண்டு. அதில் நாம் திவ்ய லிங்கமாக எழுந்தருளியிருக்கிறோம். அங்குச் சென்று எம்

மைப் பூசித்துச் சாடம் நீங்குவாய்' என்ற உத்தரவு பிறந்தது.

இதைக் கேட்டதும், மிகுந்த விநயத்துடன் சாபத்தை ஏற்று, பூமியைச் சுற்றி வலம்வந்து திவ்ய க்ஷேத்திரங்களில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பரமசிவத்தைத் தரிசித்துக்கொண்டு முடிவில் கபாலிபுரம் வந்தாள். உடனே அவளுக்கு மயில் உருவம்வர, இங்குள்ள கடலில் ஸ்நானஞ்செய்து இவ்வூர் புஷ்கரணிவந்து அதில் சகல திவ்விய தீர்த்தங்களையும் வ்ருவித்து ஸ்நானஞ்செய்தாள். பின்னர் புஷ்பங்களைச் சேகரித்துக்கொண்டு, கோயிலுள்புகுந்து புன்னை மரத்தடியிலிருந்த கபாலிநாதரை விதிப்படிப் பூஜித்தாள். பூஜையின் முடிவில் பகவான் வ்ருஷபாரூடராக பிரத்யக்ஷமாகி அம்பிகையின் மயிலுருவத்தை நீக்கி அவளைத் தம்முடன் சேர்த்துக்கொண்டார். அப்பொழுது அம்பிகையின் வேண்டுகோளின்படி கபாலிபுரத்திற்குத் திருமயிலை என்ற பெயருண்டாகும்படியாகவும், இதற்குப் பாபம் நீக்கும் திறன் முதலிய திவ்ய சக்தி வரும்படியாகவும் பகவான் அநுக்கிரஹித்தார்.

அம்பிகை மயிலாகவிருக்கையில் பகவானைப்பூஜித்தது, இந்த ஊரில் பங்குனி உத்தர பிரமோத்ஸவத்தில் முதல்நாள் இரவில் கொண்டாடப்பட்டுவருகிறது.

---

## 3. வாயிலாநாயனார் சரித்திரம்

**வ**ருஷங்களில் ருதுக்கள் எவ்வாறிருக்கின்றனவோ, அவ்வாறே மதங்கள் விஷயத்திலும் தகுந்த காலங்கள் உண்டு. எவ்வாறு வஸந்தருதுவில் செடிகொடி



வர்க்கங்கள் தழைத்து ஓங்கி அழகிய புஷ்பங்களைத் தாங்கிநிற்பதுமல்லாமல், வழியிலுள்ள புற்பூண்டுகளும் கூடப் புஷ்பித்து ஆநந்தகரமாக விளங்குகின்றனவோ, அவ்வாறே கடைசிப்பாண்டியர் காலத்தில் ஏற்பட்ட சிவமதக்கிளர்ச்சியில், தென் இந்தியாவில் ஒவ்வொரு மூலைமுடுக்கிலிருந்தும் மஹான்கள் கிளம்பினர். இவர்கள் சகல ஜாதியார்களிடத்திலிருந்தும் கிளம்பி நமது நாட்டைப் புனிதமாக்கினர். நந்தன் முதலிய இத்தகைய மஹான்களை நாம் எல்லோரும் மிகுந்த மன உருக்கம் பக்தி முதலியவைகளுடன் இன்னமும் மறவாது ஞாபகத்தில் வைத்திருக்கிறோம். நமது கதாநாயகராகிய வாயிலார் இந்தக் கிளர்ச்சிக்காலத்தில் திருமயிலையில் வேளாளர் குலத்திலுதித்தவர். அவர் வாழ்க்கைத் தொழில் பகவத் ஆராதனமாத்திரமாயிருந்தபடியால் அவர் வாழ்நாளில் அற்புத விஷயங்கள் ஒன்றும் சம்பவிக்கவில்லை. இந்தத் தொழில், பெருமபாலார்க்கும் மிக்க ஸாரமற்றதாகத் தோன்றும். ஆயினும், அது நாயனார் ஆயுள் முழுவதையும் கவர்ந்து அவருக்குப் பேராநந்தத்தை அளித்துக்கொண்டு வந்தது.

வாயிலாரது பூஜை மிக அற்புதமானது. ஊரிலுள்ள கோயிலுக்கு அவர் போனவரே யல்லர். அங்கு நடக்கும் விஷயங்கள் அவர் மனோநிலைக்குத் தாழ்ந்தவைகளாகவே அவருக்குப் பட்டபடியால், அவர் ஒரு பெரிய கோயில் கட்டினார். அதைப்போன்ற சிறந்த கோயில் இவ்வுலகில் எங்கும் இல்லை. அதற்கு அநேகம் பொற்கோபுரங்களை அமைத்தார். வெள்ளிச்சுவர், ரத்ன ஸ்தம்பங்கள் முதலியவைகளோடு கூடிய விஸ்தாரமான மண்டபங்களை அங்கு அமைத்தார். நன்றாய்

ஒழுங்காக அந்தக் கோயில் கட்டப்பட் டிருந்தது. அதைச்சுற்றிப் பஞ்சலோகங்களால் செய்த ஐந்து பிராகாரங்கள் இயற்றி, அவைகளுள் வெளிச்சுவரை இரும்பாலேயும், உட்சுவரைப் பொன்னாலேயும் அமைத்தார். அந்தக் கோயிலுள் மாம்பழம் அளவாக உள்ள ரத்தினங்கள் மூலமாய்ப் பிரகாசம் உண்டாக்கினாரே ஒழிய, சாதாரண தீபங்களை அவர் அங்குப் போடவில்லை. கண்ணாடிகளை விசித்திரமாக ஒழுங்குபடுத்திவைத்துக் கோயில் வைபவங்கள் மிகச் சிறப்புற்று விளங்கும்படி செய்தார். இந்தக் கோயிலின் மத்தியில் தாம் கைலாஸத்திற்குச் சமமாகிய மூலஸ்தானத்தை அமைத்தார். இதில் பகவத் ஸ்வரூபமான மூலலிங்கம் அமைக்கப்பட்டு, விலையுயர்ந்த ஆபரணங்கள், நல்ல பரிமளம் வீசும் புஷ்பங்கள் ஆகிய இவைகளால் ஆனந்தமாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. இந்த லிங்கத்தின் இருபுறத்திலும் இரண்டு கற்பக விருக்ஷங்கள் அமைக்கப்பட, அவைகள் தமது திவ்ய கந்தத்தைக் கோயிலெங்கும் பரவச்செய்தன. இவர் கட்டிய கோயிலின் பெருமையை மனிதர்கள் நாவால் எவ்வளவு எடுத்துச்சொல்லியும் அதன் லவலேசத்தைக்கூட உள்ளபடி வர்ணிக்கமுடியாது.

இவ்வளவு சிறந்த கோயிலைக்கட்டப் போதுமான திரவியம் வாயிலாருக்கு எங்குகிடைத்தது? அவர் எங்கு இதைக்கட்டினார்? என்ற சங்கை எல்லோருக்கும்பிறக்கும். அவர் திரவியத்தால் இக்கோயிலைக் கட்டவில்லை. அவர் கற்பனாசக்தியே இதற்கு முக்கிய ஸாதனம். இந்தக் கற்பனாசக்தி முற்கூறியபடி ஒழுங்காகத் தொழிற்படுவதற்கு அபூர்வ திரவியமாகிய பகவத் பக்தியே அவருக்கு மூலபலமா யிருந்தது. இவ்வற்புதக் கோயிலை



178155

அவர் தமது மனதிலேயே கட்டிக்கொ[...] இந்தக் கோயிலிலுள்ள பரம்பொருளோடே[...] இணைபிரியா திருப்பார். தமது சாப்பாடு, தூக்கம், தொழில் முதலியவைகளைக்கூட மறந்து இராப்பகல் ஒழிவின்றி இப்பகவானுக்குப் பூஜைகளை நடத்துவார். இரவானாலும் பகலானாலும் சரி, இடி இடித்தாலும் மழைபெய்தாலும் சரி, ஒன்றையும் கவனியாது இவர் தமது பகவத்பூஜையை விடாது நடத்திப் பரவசமாகி, தமது கோயில் பரம்பொருள் எல்லாவற்றையும் மறந்து தாம் மாத்திரமாகச் சேஷித்து அசைவற்றிருப்பார். வரவரப்பழக்கவிசேஷத்தால் இவர் மானஸபூஜை பழுத்து ஞானநிஷ்டையாக, விக்ரஹம் மறைந்து தாமே பரம்பொருளாகச் சேஷித்து நின்றார். நாயன்மார்கள் திவ்ய சரிதைகளை எழுதிய சேக்கிழார் சுவாமிகள்,

> 'மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
> யுறவாதி தனையுணரு மொளிவிளக்குச் சுடரேற்றி
> யிறவாத வானந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
> யறவாணர்க் கன்பென்னு மமுதமைத்தர்ச் சனைசெய்வார்

என்று ஆனந்தபரவசமாகக் கூறுகிறார். அவரது மௌனமான மானஸபூஜையின், சிறப்பு காலக்கிரமத்தில் பலரறிய வெளிவர, அவர் விதேக முக்திபெற்றதும் ஸமாதி செய்யப்பெற்று நாயன்மார்களுள் ஒருவராக மதிக்கப்பெற்றார்' என்று புராணங்கள் கூறும். இப்பொழுது திருமயிலை அம்பாள் ஸந்நிதிக்கெதிரில் பிராகாரத்தில் வாயிலாநாயனர் கோயில் இருப்பதை யாவரும் காணலாம்.

இதுவே மானஸபூஜையின் சிறப்பு. நண்பர்களே! பரமபதம் இவ்வளவு எளிதில் கிடைக்கக்கூடியதாயி

னும், எவ்வளவு சிரமஸாத்யமாகவும் இருக்கிறது பாருங்கள்.

## வாயிலா நாயனார் சரித்திரம்

பெரிய புராணம்.

சொல்வி ளங்குசீர்த் தொண்டை நன்னாட்டிடை
மல்ல னீடிய வாய்மை வளம்பதி
பல்பெ ருங்குடி நீடு பரம்பரைச்
செல்வ மல்கு திருமயிலாபுரி. (க)

நீடு வேலைதன் பானிதி வைத்திடத்
தேடு மப்பெருஞ் சேமவைப் பாமென
ஆடு பூங்கொடி மாளிகை யப்பதி
மாடு தள்ளு மாக்கலச் செப்பினால். (உ)

கலஞ்சொ ரிந்த கரிக்கருங் கன்றுமுத்
தலம்பு முந்நீர் படிந்தனை மேகமு
நலங்கொண் மேதிநன் னாகுந் தொக்கொணு
சிலம்புதெண் டிரைக் கானலின் சேணெலாம். (௩)

தவள மாளிகைச் சாலை மருங்கிறைத்
துவள்ப தாகை நுழைந்தணை தூமதி
பவள வாய்மட வார்முகம் பார்த்தஞ்சி
யுவள கஞ்சேர்ந் தொதுங்குவ தொக்குமால். (௪)

வீதி யெங்கும் விழாவணிக் காளையர்
சாதி யங்குஞ் சுரும்பணி தோகையர்
ஓதி யெங்கு மொழியா வணிகிளர்
பூதி யெங்கும் புனைமணி மாடங்கள். (௫)

மன்னு சீர்மயி லைத்திரு மாநகர்த்
தொன்மை நீடிய சூத்திரத் தொல்குல
நன்மை சான்ற நலம்பெறத் தோன்றினார்
தன்மை வாயிலா ரென்னுந் தபோதனர். (௬)



வாயி லாரென நீடிய மாக்குடித்
தூய மாமர பின்முதல் தோன்றியே
நாய னார்திருத் தொண்டி னயப்புறு
மேய காதல் விருப்பின் விளங்குவார். (௭)

### வேறு

மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
யறவாதி தனையுணரு மொளிவிளக்குச் சுடரேற்றி
யிறவாத வானந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
யறவாணர்க் கன்பென்னு மமுதமைத்தர்ச் சனைசெய்வார். (௮)

அகமலர்ந்த வர்ச்சனையி லண்ணலார் தமைநாளு
நிகழவரு மன்பினா னிறைவழிபா டொழியாமே
திகழநெடு நாட்செய்து சிவபெருமா னடிநிழற்கீழ்ப்
புகலமைத்துத் தொழுதிருந்தார் புண்ணியமெய்த்தொண்டனார். (௯)

நீராருஞ் சடையாரை நீடுமனா லயத்துள்
ஆராத வன்பினா லர்ச்சனைசெய் தடியவர்பால்
பேராத நெறிபெற்ற பெருந்தகையார் தமைப் போற்றிச்
சீராருந் திருநீற்று முனையடுவார் திறமுரைப்பாம். (௰)

தொண்டைமண்டலத்திலே, மயிலையம்பதியிலே, சூத்திரர்மரபிலே, வாயிலா நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானை உள்ளமென்னுங் கோயிலிலே இருத்தி, ஞானமாகிய சுடர் விளக்கேற்றி, அன்பாகிய அமுதை நிவேதித்துப் பல நாளாக ஞானபூசை செய்துகொண்டிருந்து, அறுமீன் காதலனை அளித்த அரனடி சேர்ந்தார்.

# 4. திருவள்ளுவர் சரித்திரம்

இம்மஹான் தாய்தந்தையர்களுக்கு முறையே ஆதி என்றும் பகவன் என்றும்பெயர். இவருடன்பிறந்தவர்களுள் ஔவை முதலிய பெண்கள் நான்குபேர்; கபிலர் முதலிய பிள்ளைகள் இருவர். தடுக்கமுடியாத ஒரு காரணத்தால் இளமைப்பருவத்தில் இவர் தாய்தந்தையர்கள் இவரைவிட்டுப் பிரியும்படி நேரிட, அப்பொழுது பிரிவாற்றாமையால் வருந்தின தாயை இவர்,

'எவ்வுயிரும் காக்கவோர் ஈசனுண்டோ இல்லையோ?
அவ்வுயிரில் யானொருவன் அல்லவோ?—வவ்வி
யருகுவது கொண்டிங் கலைவதேன் ? அன்னே !
வருகுவது தானே வரும்?''

என்ற வெண்பாக் கூறித் தேற்றினார். இதனாலேயே இவர் வரகவி என்பது நன்றாக வெளியாகும். இதன் பின்னர் இவர் திருமயிலையில் வள்ளுவர் வீட்டிலே வளர்ந்துவந்தார். இவ்வாறிருக்குங்கால் இவர் சிற்சில சமயங்களில் ஸித்தர்கள் வசித்துக்கொண்டிருந்த மலைகளுக்குச் சென்று தவமும் செய்து சிறந்த சக்திகளைப் பெற்றார்.

இப்படியிருக்கையில் காவிரிப்பாக்கம் என்ற ஊரைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களில், ஒரு வேதாளம் புகுந்து பயிர்களை எல்லாம் அழிக்கத்தலைப்பட, அங்கிருந்த மார்க்கஸஹாயர் என்பவர் திருவள்ளுவரை வருவித்தார். இவர் வந்து எளிதில் வேதாளத்தை அடக்கி ஜனங்களுக்குச் சாந்தத்தை உண்டாக்கினார். இவரது திறத்தைக் கண்டு மெச்சி, மார்க்கஸஹாயர் தமது பெண்ணாகிய வாஸுகியென்பவளை இவருக்குக்



வாஸுகி அம்மன்



திருவள்ளுவ நாயனார்



கல்யாணம் செய்துகொடுத்தார். உடனே திருவள்ளுவர் திருமயிலை வந்து, விதிப்படி இல்லறம் நடத்தத் தொடங்கி, நெசவுத் தொழில் ஒருவித பாபத்திற்கும் இடனாகாதென்று ஆராய்ந்து அதையே மேற்கொண்டார்.

இப்படி இவர் நடந்துகொண்டுவந்த காலத்தில் இவரிடம் 'இல்லறம் மேலா? துறவறம் மேலா?' என்ற விஷயத்தை அறிந்து தெளிந்துகொள்ள ஒருவர்வந்தார். அவர் பலநாள் காத்திருந்தார். ஒருநாள் திருவள்ளுவர் திடீரென்று மனைவியைக் கூப்பிட, அவள் அரைக் கிணறு வந்துகொண்டிருந்த பாத்திரத்தை விட்டு விட்டு, உடனே ஓடிவந்து கணவனுக்கு வேண்டியவிஷயங்களை விசாரித்துப் போனாள். மற்றொரு நாள் இவள் பழையது பரிமாறி நிற்கையில், கணவன் 'சுடுகிறது, விசிறி கொண்டுவா' என, தயங்காது உடனே விசிறியைக் கொண்டுவந்து கொடுத்தாள். வேறு ஒருநாள் பகலில் நெய்துகொண்டிருந்த நெசவு ஊசி, கீழே விழுந்துவிட அதைத்தேடி எடுக்கத் 'தீபங்கொண்டுவா' என, அப்பொழுதும் அந்த அம்மாள், கணவன் சொற்படி மனங்கோணாது நடந்தாள். வந்தவர் இவைகளைக் கண்டு—

'பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலும் கூடிவாழலாம்—சற்றேனும்
ஏறுமாறாக இருப்பாளே யாமாகில்
கூறாமல் ஸந்நியாசம் கொள்'

என்று உணர்ந்து திருப்தியடைந்து போய்விட்டார்.

இவ்வாறு திருவள்ளுவர் சச்சரவற்ற ஜீவனம் செய்துவரும் நாளில், இவருக்கு நெசவுசெய்ய நூல் விற்றுவந்த ஏலேலசிங்கன் என்ற வியாபாரியின்

பிள்ளையாகிய அழகானந்தனால் தூண்டப்பட்டுச் சகல வேத ஸாரமாகிய திருக்குறளை, இவர் எழுத முயன்று பப்பத்துப் பாட்டுக்கள் அடங்கிய 133 அத்தியாயத்தில் முடித்து அதை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்றாகப் பகுத்தார். இவற்றுள் அறத்தைப் பொதுப்படையாக இல்லறம் என்றும், துறவறமென்றும்; பொருள்விஷயத்தை அரசியல், அங்கவியல், ஒழிவியல் என்றும், காமத்துப்பாலைக் களவியல், கற்பியல் என்றும் பிரித்தார். இந்த அருமையான நூலை எடுத்துக்கொண்டு இவர் மதுரைசென்று அரங்கேற்றினார்; அங்கிருந்த சங்கப்புலவர்கள்கூறிய அநேகபாட்டுக்களால் புகழப்பெற்றார். இந்தப் பாட்டுக்களின் தொகுதிக்குத் திருவள்ளுவமாலை என்று பெயர். இவைகளுள் ஒளவையார் கூறிய 'அணுவைத்துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தரித்தகுறள்' என்ற புகழ்ச்சியே மிகச் சிறந்தது. குறளின் உண்மையான ஸ்வரூபத்தை இது நன்கு விளக்குவது.

இவர் மதுரையிலிருந்து மயிலைவந்து கொஞ்ச காலம் இல்லறம் நடத்திவந்தார். அப்பொழுது ஒருநாள் இவர் புதியதாக நெய்த ஒரு துணியைக் கடைக்கு எடுத்துச் சென்றார். அங்கு ஒரு கொடியவன் வந்து இவர் பொறுமையைக் காணவிரும்பி அந்தத் துணியை வாங்கி, 'இதன் விலை என்ன?' என்றான். அவர் 'ஒரு பணம்' என்றார். அதை இருபாதியாகக் கிழித்து, 'இவ்வொன்றன் விலை என்ன?' என்று கேட்க, 'அரைப் பணம்' என்றார். இப்படிச்செய்தும் கோபியாத திருவள்ளுவரைக்கண்டு மெச்சிக்கொண்டு போய்விட்டான். மறுநாள் இக்கொடியவன், இவர் வீடுவந்து இவர் பெண்



சாதியை வலியச்சண்டைக்கிழுக்க, இவர் பொறுது மிகுந்த கோபத்துடன் அவனை வந்து தடுத்தார். அப்பொழுது அவன்,

"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத், தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை."

என்று உமது குறளில் கூறிவிட்டு, நீர் நடத்தையில் விரோதமாக நடக்கலாமா?' 'என்றான். அதற்குத் திருவள்ளுவர் "என் குறளில் மற்றோரிடத்தில்,

'செய்தக்க வல்ல செயக்கெடும், செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.'

என்றும் கூறியிருப்பதற்கேற்ப, இந்தச் சமயத்தில் நான் இவ்வாறு செய்யவேண்டும் என்று உணர்ந்தே செய்தேன்" என்றார். இவரது பரிசுத்த நிலையைக் கண்டு சந்தோஷித்துவிட்டு அவன் போய்விட்டான். இக்குறளாகிய வேத ரஹஸ்யத்தை வெளிப்படையாக உலகத்தவர்களுக்குக் கொடுத்த பெரும் வள்ளலாதலால் இவருக்குத் திருவள்ளுவர் என்ற காரணப்பெயர் வந்தது என்பார் பெரும்பாலாரும்.

இப்படிப் பரிசுத்தராக இவர் வாழ்ந்துவந்த நாளில் இவர் மனைவி வாஸுகி தேகவியோகமானாள். அப்பொழுது இவர்,

'அடிசிற் கினியாளே ! யன்புடையாளே !
படிசொல் தவறாத பாவாய் !—அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழூஉம் பேதையே ! போதியோ !
என்தூங்கும் என்கண் இரா ?'

என்ற வெண்பாக்கூறி அவள்மீது இரங்கி மனம் நொந்தாராம்.

இவர் எழுதிய நூல்களிலிருந்து இவர் மதம் இன்னது என்பது வெளியாகவில்லை. இவர் கடவுள் வாழ்த்துகள் பொதுப்படையாக இருக்கின்றன. சிலர் இவரைச் சமணர்என்பர். மயிலாப்பூரிலோ இவரைச் சைவரெனக் கொண்டாடுகின்றனர். சென்ற பதின்மூன்று வருஷங்களாக, இவ்வூர் அறுபத்துமூவர் உத்ஸவத்தன்று இவர் விக்ரஹம் ஸ்வாமியின்பின் புறப்பட, தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு இந்த உத்ஸவம் நடந்து வருகின்றது. இவ்வருஷம் முதல், இவர் பத்தினி வாஸுகியின் விக்ரஹமும் தயாரித்து, அதையும் திருவள்ளுவ விக்ரஹத்துடன் புறப்பட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சென்ற சில வருஷங்களாக, திருவள்ளுவர் கோயிலில் பிரதிவருஷமும் இவர் பிறந்த நாள் வைபவம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இவரைப் பிரமதேவரது அம்சம் என்று பின்னவர் மதித்தனர். 'ஒருசமயம் கைலாஸத்தில் பகவான் ஆனந்தத்தாண்டவமாடிக் கொஞ்ச நாழிகை ஆனதும் தேவதைகளை நோக்கி "இந்தத் தாண்டவத்தில் என்ன அற்புதங் கண்டீர்கள்? சொல்லுங்கள்" என, அவர் இன்னது என்று கூறமுடியாது விழித்தனர். அப்பொழுது பூமியில் திருவள்ளுவரிடம் போய்த் தெரிந்து கொள்ளும்படி பகவான் ஏவ, அவர்கள் திருவள்ளுவரிடம் வந்து விசாரித்தனர். அதற்கு அவர்,

'பூவில் அயனும், புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனும் தாமிருக்க—காவில்
இழைக்கி நூல்கொடும் ஏழை அறிவேனோ
குழைக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து?'

என்று மஹாவிநயத்துடன் குறிப்பாகப் பகவான் தாண்டவமாடுகையில் அவர் காதிலிருந்த குழை கீழே



விழுந்ததென்றும், அதை அவர் வெகு லாகவமாக ஒருவருக்கும் தெரியாது வாயால் எடுத்துக் காதில் அமைத்துக் கொண்டார் என்றும் காட்டினார். இம்மாதிரியான கதையாலேயே இவர் சைவரென மதிக்கப்பட்டார் போலும்.

---

## 5. பேயாழ்வார் சரித்திரம்

இவர் முதலாழ்வார்கள் என்று கூறப்படும் பொய்கை, பூதம், பேய் என்ற மூவருள் ஒருவர். இவர்களுக்கு ஏன் இப்பயங்கரப் பெயர்கள் வந்ததென்று சிலர் சந்தேகிக்கலாம். இவர்கள் மஹா ஞானிகளாகயிருந்து பகவத் பக்தியில் ஈடுபட்டு 'பால உன்மத்த பிசாசவத்' என்று வேதாந்தங்கள் கூறுவதுபோல வெளிப்படைத் தோற்றத்தில் காணப்பட்டு உலக்விஷய சம்பந்தமே அற்று இங்கு உலாவிவந்தனர். ஆதலால்தான் ஒருவருக்குப் பூதம் என்றும், மற்றவருக்குப் பேய் என்றும் உள்ள பெயர்கள் அமைந்தன. பகவத் கல்யாண குணங்கள் என்னும் சமுத்திரத்தில் (ஆழியில்) பரவசமாகி மூழ்கிவிட்டவர் (ஆழ்ந்தவர்), ஆதலால் இவர்களுக்கு ஆழ்வார்கள் என்ற பெயர் உண்டாயிற்று. இம்மூவருக்கும் வைகுண்ட ஸேனாபதியாகிய விஷ்வக்ஸேனரால் சகல மந்திரங்களும் உபதேசம் செய்யப்பட்டு. இவர்களுக்கு ராஜஸ தாமஸ குணங்களில் ஸாத்விகமே சேஷித்தது. இவர்கள் எல்லா ஆழ்வார்களுக்கும் முன்னாலே அவதாரம் செய்து, பின்னர் உண்டாகிய திவ்யப் பிரபந்தங்களுக்கு ஓர் இலக்கணம்போல் விளங்கும்படியான பாடல்களைப் பாடியதால், இவர்களுக்கு முதலாழ்வார்கள் என்ற பெயர் உண்டாயிற்று.

பேயாழ்வார் திருமயிலையில் ஸ்ரீ ஆதிகேசவஸ்வாமி கோயிலில் கிணற்றில் புஷ்பித்த ஒரு செவ்வல்லிப் பூவில் ஸ்ரீமந் நாராயணரது வாளாகிய நந்தகம் என்ற ஆயுதத்தின் அம்சமாக அவதாரம் செய்தார். இவர் அவதாரம் செய்த கிணறு, இப்பொழுது இவ்வூரிலே மாதவப்பெருமாள் கோயிலின் அருகாமையிலிருக்கின்றதென்று சிலரும், அது இப்பொழுது ஜட்கா வண்டி நிற்குமிடத்திற் கருகாமையிலுள்ள துலுக்கர் மசூதியில் அகப்பட்டுவிட்டது என்று வேறு சிலரும் அபிப்பிராயப்படுகின்றனர். அவர் இவ்வூரில்தான் அவதரித்தார் என்பதற்கு ஐயமில்லை.

தமது யாத்திரையில் பேயாழ்வார் பிணாகினி நதிக் கரையிலுள்ள திருக்கோவிலூர் என்னும் க்ஷேத்ரம் வந்துசேர்ந்தார். அங்கு இரவில் தங்க அவ்வூர் மிருகண்டு முனிவர் வீடுவந்தார். அங்குமுன்னரே வந்திருந்த பொய்கை பூதத்தாழ்வார்கள் அவ்வீட்டு நடையில் உட்கார்ந்திருந்தனர். இவர் வந்ததும், 'மூவர் இங்கு நிற்கலாம். நீரும் வாரும்' என்று மிகுந்த அன்புடன் அவர்கள் அழைக்க, பேயாழ்வாரும் உள்ளே புகுந்தார். அன்று காற்றும் மழையும் இருளும் அதிகரிக்க இவர்கள் ஒருவர்மேலொருவர்பட நெருங்கியிருந்தனர். அப்பொழுது பகவான் தமது சக்தியால் அங்குப் புகுந்து நெருக்க 'யார் புதிதாக வந்தது' என்று சோதிக்க, ஒருவரையும் காணவில்லை. அப்பொழுது பொய்கையாழ்வார், பூமியை அகலாகவும், கடலை நெய்யாகவும், சூரியனை விளக்காகவும்; பூதத்தாழ்வார், அன்பை அகலாகவும், ஆர்வத்தை நெய்யாகவும், சிந்தையைத் திரியாகவும் கொண்டு ஞானதீபங்களை ஏற்ற இருள் நீங்கிற்று.



அப்பொழுது மஹாபக்த சிரோமணியான பேயாழ்வார், பரம்பொருளை அங்குக் கண்டு உணர்ந்து ;

'திருக்கண்டேன் ! பொன்மேனி கண்டேன் ! திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் !—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் ! புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.'

என்று ஆநந்தபரவசராகிப் பாடி அரற்றினார். இவ்வாறு மூவரும் ஒருவரை ஒருவர் தெரிந்துகொண்டு ஆநந்த பரவசராய்ப் பகவத்கிருபைபெற்றுத் திவ்விய தேச யாத்திரை செய்தார்கள்.

ஒருநாள் திருமழிசையாழ்வார் ஆச்ரமத்தருகில் இவர் யாத்திரை செய்துகொண்டுவந்தார். அப்பொழுது அவர் இன்னபடி சகல மதங்களிலும் பழகி முடிவில் சைவ ஸமயமே ஸமயம் என்று தேர்ந்து தீக்ஷைபெற்றுத் தவம் புரிகிறார் என்று கேள்விப்பட்டு, அவரை வைஷ்ணவத்திற்கு மாற்றிவிடக்கருதி, அருகாமையில் தாமும் ஓர் ஆச்ரமம் ஏற்படுத்திக்கொண்டார். அதைச் சுற்றிப் பேயாழ்வார் ஒரு தோட்டம்போட்டு அதில் செடிகளைத் தலைகீழாக நட்டு, ஓட்டைப்பானை அறுந்த கயிறு இவைகள் சகாயத்தால் தண்ணீர்பாய்ச்சத் தொடங்கினார். இதைக் கண்ணுற்ற திருமழிசையாழ்வார் 'உமக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா' என்று காரணங்கள் காட்டிக் கேட்க, அதற்கு அவர் 'பல மதங்கள் பற்றியும் முடிவில் பரதத்வம் அறியாது தெரிந்ததைக் கொண்டு மேல் ஒன்றும் இல்லை என்று இறுமாந்திருக்கும் உன்னைவிட எனக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டது' என்றார். பேயாழ்வார் கூறிய வார்த்தையில்

அவர் ஈடுபட்டு அவரையே குருவாகக்கொண்டு வைஷ்ணவம் அநுஷ்டித்து இவர் ஆழ்வார்களுள் ஒருவரானார்.

பேயாழ்வார் யோகபலத்தால் வெகுகாலம் இவ்வுலகில் பகவத்பக்தியில் ஈடுபட்டு வாழ்ந்து, முடிவில் திருக்கோவிலூருக்கே போய்ப் பரமபதம் பெற்றார்.

**பஞ்சரத்தினம்.**—மணாளனைத்தவிர மற்றொருவரை மனத்திலும் நாடாத ருக்குமிணி, நமனிடமிருந்து நாயகன் உயிரை மீட்டுவந்த சாவித்திரி, காதகர்கையிற் சிக்கி கஷ்டப்பட்ட காலத்தும் கற்பைக் காத்துவந்த சீதை, தந்தை வீட்டில் எல்லாச் சம்பத்திருந்தும் காதலன் பிரிந்த துக்கத்தால் தரையே படுக்கையாகவும், கந்தையே ஆடையாகவுமெண்ணிக் காலங்கழித்து வந்த தமயந்தி, கள்ளமென்பதை எள்ளளவும் உணராதவளும் தன்னைக் கூடிப்பிரிந்து ஆண்டுகளாயும் கணவன் வருமளவும் காத்திருப்பதே கடமையைக் கொண்டவளுமான சகுந்தலை முதலிய 5-புண்ணியவதிகளின் சரிதங்கள்கொண்டது. துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. அநேகமாய் எல்லாப் பாடசாலைகளிலும், கவர்ன்மெண்ட் டிரெயினிங் ஸ்கூல்களிலும் பாடப்புத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஐந்து அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது. விலை அணா **12.**



**துரைத்தனத்தார் அங்கீகரித்தது**

# இயற்கை = = =
# = = அற்புதங்கள்

இது ஆ. வீ. கஸ்தூரிரங்கய்யர், பி.ஏ., எல்.டி., அவர்கள் இயற்றியது.

ஸ்கூல் இன்ஸ்பெக்டர், ராவ் பகதூர் எல். வீ. வில்லியம்ஸ் பிள்ளையவர்கள் எழுதிய சிறந்த முகவுரையுடன் கூடியது. சித்திரப்படங்கள் அடங்கியுள்ளது.

## இதில் அடங்கிய விஷயங்கள்

1. மழைக்கால்கள்
2. எரிமலைகள்
3. பூகம்பம்
4. வெந்நீர் ஊற்றுகள்
5. கானல் நீரும், அதன் ரூபாந்தரங்களும்
6. வால் நக்ஷத்திரங்கள்
7. எரிநக்ஷத்திரங்கள், பொழிநக்ஷத்திரங்கள்
8. வானவில்
9. நிழலும், கிரகணங்களும்
10. ஹாலிவால் நக்ஷத்திரம்

ஆங்காங்கு அநேகம் சித்திரப்படங்களும் அழகாய் அச்சிட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன. எலிமெண்டரி உபாத்தியாயர்களுக்கும், மாணவர்களுக்கும், புஸ்தக சாலைகளுக்கும் மற்ற யாவர்க்கும் இன்றியமையாதது.

விலை அணா **10.**

**மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.**

# விவேக போதினி

தென் இந்தியாவில் பிரசுரமாகும் தமிழ்ப் பத்திரிகைகளுள் எவ்விதத்திலும் மிகச் சிறந்தது. பற்பல அருமையான விஷயங்கள் கொண்டது. யாவராலும் நன்கு மதிக்கப்பட்டது. வருஷசந்தா உள்நாடுகளுக்கு ரூ. **5** :: வெளிநாடுகளுக்கு ரூ. **6**. மாதிரிச் சஞ்சிகை **4** அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெறலாம்.

## = = வருஷாந்தரப் புத்தகம் = =

**அழகாய்ப் பைண்ட் செய்யப்பட்டது**

பற்பல அபூர்வ விஷயங்கள் அடங்கியது

அழகிய ஆப்டோன் படங்கள் நிறைந்தது

**ஒவ்வொரு தொகுதியின் விலை ரூ. 6**

| தொகுதி | | | | | பக்கங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 1908 ஜூலை முதல் | 1909 ஜூன் வரை | | | 364 |
| 2 | 1909 | ,, | 1910 | ,, | 396 |
| 3 | 1910 | ,, | 1911 | ,, | 464 |
| 4 | 1911 | ,, | 1912 | ,, | 534 |
| 5 | 1912 | ,, | 1913 | ,, | 512 |
| 6 | 1913 | ,, | 1914 | ,, | 480 |
| 7 | 1914 | ,, | 1915 | ,, | 480 |
| 8 | 1915 | ,, | 1916 | ,, | 436 |
| 9 | 1916 | ,, | 1917 | ,, | 348 |
| 10 | 1917 | ,, | 1918 | ,, | 372 |
| 11 | 1918 | ,, | 1919 | ,, | 372 |
| 12 | 1919 | ,, | 1920 | ,, | 385 |
| 13 | 1920 | ,, | 1921 | ,, | 336 |
| 14 | 1921 | ,, | 1922 | ,, | 430 |

**மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.**

# தனபாக்கியம்

## அல்லது : : ஒரு

## அதிருஷ்டவதியின் சரித்திரம்

இது ஒரு அனுபவ நாவல். எளிய தமிழ் நடை
யில் சகல பிராயத்தினரும் படித்து ஆநந்திக்கக்
கூடிய தன்மையில் எழுதப்பட்டிருக்கிறது. ஆரம்பத்
திலிருந்து முடிவு வரையில் சுவை ததும்பி வாசிப்
பவருக்கு ஆச்சரியத்தையும், பன்முறையும் படிக்க
ஆவலையும் உண்டுபண்ணும் விதத்தில் இருக்கக்காண
லாம். தனபாக்கியம் என்னும் இக்கதாநாயகியின் பல
உந்நதமான குணங்களும், அவளுடைய அறிவு,
ஒழுக்கம், அடக்கம் முதலியனவும் இப்புத்தகத்தில்
காணக்கூடிய விதத்தில், அவ்வளவு உண்மையாகவும்,
உயர்வாகவும் பிறநாவல்களில் இதுவரையிலும் காட்
டப்பட்டிருக்கவில்லை யென்றே சொல்லலாம். ஒரு
குடும்பத்தில், தகப்பனுடைய பொறுப்பும், மக்க
ளுடைய கடமையும் வெகு தெளிவாகவும், வாசிப்
போர் கைப்பிடித்து ஒழுகக்கூடிய மாதிரியிலும் ஆளப்
பட்டிருக்கின்றன. அநேக ஆச்சரியமான சம்பவங்
களும், கள், சூது, பொதுமகளிர் விழைவு முதலிய
துர்க்குணங்கள் வயப்பட்டார் அடையும் கதியும் அதிக
நயமாக விளக்கப்பட்டிருக்கின்றன. நன்னெறி கைக்
கொண்டார்க்கு என்றும் உய்வு உண்டென்பதும்,
என்றும் எவ்விதமாகிய தீப்பயனும் எய்காதென்பதும்
இக்கதையிலிருந்து எடுபடும் திரண்ட கருத்துரை
யாம். உயர்ந்த தாளில் (8) எட்டு அழகிய ஆப்டோன்
படங்களுடன் கூடியது. இப்புத்தகத்தின் விலை
இரண்டு பாகங்களும் சேர்ந்து ரூ. **2**.

**மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.**

# தஞ்சை நாயகர் தாழ்வு

அல்லது

## = விதியின் வலிமை =

### நான்கு ஆப்டோன் படங்களுடன் ரூ. 1.

இந்நூல் நமது தென்னாட்டுப் பூர்வ சரித்திரத்தை யொட்டி எழுதப்பெற்ற ஓர் இனிய நாடகம். இப்போது நமது நாட்டுப் பண்டைய சரித்திரத்தை யாவரும் எளிதிலறியுமாறு இந்நாடகம் எழுதப்பட்டுள்ளது. பண்டு விஜயநகரத்தில் அரசுபுரிந்துவந்த ராயர் வம்சத்து அரசர்களால் பாண்டிய வரசர்களின் வேண்டுகோளின்படி அனுப்பப்பட்டு, பாண்டியவம்சம் நசித்துப்போனதனால் அவர்களது நாட்டைத் தம்முடைய தாக்கிக்கொண்டு ராயர் வம்சத்தரசர்களுக்குப் பிரதிநிதிகளாக, மதுரையிலும் தஞ்சையிலும் ஆண்டுவந்த நாயகர்வம்சத்து அரசர்கள் ஒருவரோடொருவர் மாறுபட்டுப் பொருததில். தஞ்சைநாயர் வம்சம் அழிந்து மகாராட்டியர் தஞ்சையைக் கைப்பற்றிக்கொள்ளச் சமயம்வாய்ந்த சரித்திரத்தை நடந்தவாறு உண்மை தவறாது விநோதமாக எடுத்துக் கூறியிருக்கிறது. நாடகபாத்திரர்களில் ஒவ்வொருவருடைய அந்தரங்க எண்ணங்களையும் அற்புத சக்தியுடன் ஊகித்தறிந்து, அவரவர்களது வார்த்தைகளில் அவைகள் மறைந்து தோன்றுமாறு எழுதிய சாதுர்யம் பெரிதும் மெச்சத்தக்கது. ஊழ்வலி யாவற்றினும் பெரிது என்னும் நீதியைப் பலசந்தர்ப்பங்களில் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறது. நடிப்பதற்கு யோக்கியமாக பல அகவல்களையும் கீர்த்தனைகளையும் இந்நாடகத்துக்கென்றே பாடி அமைத்திருக்கிறது. நாடகத்தமிழின் இலக்ஷணங்களனைத்தும் வாய்ந்த இந்நூல், படிப்பவர் கேட்பவர், நடிப்பவர், பார்ப்பவர் ஆகிய யாவர் மனத்தையும் கவர்ந்து களிப்பூட்டி அறிவைப் பெருக்குமென்பதற்குச் சிறிதும் ஐயமே இல்லை. விலை ரூபாய் ஒன்றே.

**மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.**



<u>துரைத்தனத்தார் அங்கீகரித்தது</u>

# மரகதவல்லி :: அணா 12

(பஞ்சரத்தினம் ஆசிரியர் இயற்றியது.)

### சில முக்கிய அபிப்பிராயங்கள்

**ஸ்ரீமான் எஸ். அனவரதவிநாயகம்பிள்ளை அவர்கள், எம். ஏ., எல். டி.,—** * கதையமைப்பு நவீனக லக்ஷணத்தை முழுதும் அநுசரித்ததா யிருக்கின்றது.

---

**தி. செல்வகேசவராய முதலியார் அவர்கள், எம்.ஏ.—** * * * மரகதவல்லி உண்மையில் நடந்தவாறு எழுதப்பட்டிருக்கிறது. சோகரசங்கலந்து என் கண்களில் நீர்வடியச் செய்தது. நான் பார்த்த அற்புதமான இரண்டொரு கதைகளில் இது ஒன்றாகுமென உறுதியாய்க் கூறுவேன்.

---

**திவான் பஹதூர், ஏ. சுப்பராயலு ரெட்டியார் அவர்கள்.—** * * நடையும் கருத்தும் பரிசுத்தமாயும், படிப்பவர் மனம் பதியுமாறும் எழுதப்பட்டிருக்கிறது.

---

**ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ் திவான் பஹதூர் ஸர். டி. சதாசிவய்யரவர்கள்.—** இனிய தமிழிலெழுதப்பட்டு நல்லவருடைய கூட்டுறவு துன்மார்க்கரைத் திருத்தவல்லதென்பதை விளக்குகிறது. இதில், ஆய்ந்தோய்ந்து பாராது அவசரத்தில் கொள்ளும் போலிக் கொள்கைகளை நீக்கி, நம்மவரிடமுள்ள உண்மையான குறைகளைக் காட்டியிருக்கின்றன.

---

**எம். சிங்காரவேலு முதலியாரவர்கள்.—** (பாடசாலை இன்ஸ்பெக்டர்) —நமது சிறுவர் சிறுமியரேயன்றிப் பெரியோரும் பலகால் படிக்கவேண்டிய நூல் மரகதவல்லியே என்று நான் திடமாய்க் கூறுவேன். தெளிவும், பரிசுத்தமும் அழகும் கூடிய செந்தமிழில், உயர்ந்த நீதிகளைத் தக்க உதாரணங்களால் காட்டி உண்மையில் நடந்தவாறு எழுதப்பட்டிருக்கிறது.

---

**வி. கனகசபை பிள்ளை அவர்கள், பி. ஏ., பி.எல்.—** * * * நடை இனியதும் பரிசுத்தமா யிருப்பதுடன் கதை இனிப்பாயும் அழகாயு மிருக்கிறது. இதை வாசிக்கும் ஆண் பெண்கள் பயனடையத் தவறார்.

**மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.**

# மூ ர ளீ த ர ன்

(ஓர் இந்திய மாதால் எழுதப்பட்டது.)

மிகவும் ஆநந்தத்துடன் எல்லோரும் கருதக்கூடிய மாசற்ற இளம்பருவத்தின் இன்பமும், நம் மதத்திற்குரிய சிறந்த விவாக விமரிசைகளும், அவ்விவாக காலத்தில் ஏற்படும் கோலாகலங்களின் அழகும், ஜகத் ரக்ஷகியாய், ஸகல ஜீவ தயாபரியாய் ஜகன்மாதாவாய் விளங்கும் ஈசுவரியின் சிறப்பும், அவளது பக்தியில் ஈடுபட்டு நிற்கும் பக்த கோடிகளின் உயர்வும், கடற்கரைக் காட்சியும், உண்மை நட்பின் பெருமையும், ஊராருடன் வீண்வம்பு பேசுவதனால் வரும் தீங்கும், அன்புள்ள காதலர்களின் மனோநிலையும், பொறுமையின் சிறப்பும், எளிய நடையில் சிறுமியரும் உத்ஸாகத்துடன் வாசிக்கும் வண்ணம் எழுதப்பட்டிருக்கிறது. ஆட்டோன் சித்திரப் படங்களும் கொண்டது.

விலை அணா 10.

---

# கு ண் ட ல கே சி

அல்லது

## நற்கோலவிளை மூற்கோணறவள்

தமிழ் மொழியிலே "பஞ்ச காவியங்கள்" என்று கற்றோரால் பெரிதும் பாராட்டப்படும் நூல்கள் சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி என்பனவாம். இவற்றுள் ஒன்றான குண்டலகேசி என்னும் நூல் இக்காலத்தில் இல்லை; பண்டைக் காலத்திலேயே அஃது இறந்தொழிந்ததுபோலும். ஆனால், இந்நூல் எதைப்பற்றிக் கூறுவதென்பது, இப்போது காணப்படும் சில செய்யுட்களைக் கொண்டும், பிற சாதனங்களைக்கொண்டும் ஒருவாறு அறியக்கிடக்கிறது. அவைகளை ஆதாரமாகக்கொண்டு காகை ஸ்ரீகோபால கிருஷ்ண பிள்ளை இக்காவலை மிக உயர்ந்த செந்தமிழ் நடையில் எழுதியுள்ளார். இது சரித்திர சம்பந்தமான நாவலாகும். பௌத்த தர்மங்களைப்பற்றியும் இக்காவல் விவரித்துக் கூறுகிறது. இக்காவலின் கம்பீரமும் அழகும் வாய்ந்த இனிய வசன நடை, படிப்போர் மனதைப் பெரிதும் பரவசப்படுத்தும்படியான வகையில் அமைந்திருக்கிறது. புதிய பதிப்பு விலை அணா 8.

---

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

---

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

# ஆரியமத = = =

# = உபாக்கியானம்

## அநேகம் அழகிய ஆட்டோன் படங்களுடன்

முதல் பாகம் அணா 8 : : இரண்டாம் பாகம் அணா 10

## ■ ஒவ்வொரு பாகமும் ■

## 54 சிறந்த நீதிக்கதைகளைக் கொண்டது

### சில முக்கிய அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்.—* * இது பாலியர்களுக்கு நீதி மார்க்கங்களைப் போதிக்கும் அருமை நூலாகும். * இத்தகைய சிறந்த நூல் மத கல்விச்சாலைகளில் பாடப்புத்தகமாக ஏற்படுத்தல் மெத்த அவசியம். கீழ்தரப் பாடசாலை மாணவர்களுக்குத் தகுந்தபடி இப்புதகம் நன்றாக எழுதப்பட்டிருக்கிறது.

**Sir P. S. Sivaswami Aiyer, K.C.S.I., C.I.E.**—*The stories are such as to appeal to all boys and are told in an easy popular style. The work is very well adapted for the lower forms of our schools.*

*The Madras Mail.—The book is well adapted for use in the lower froms of schools as a Text Book of Morals.*

*The Hindu.—The book can be profitably introduced in Elementary Schools for Moral Instruction.*

தேசபக்தன்.—* * மனித வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டற்பாலனவாய ஒழுக்கம், பக்தி, கடமை முதலியவற்றைச் சரித்திரவடிவாகப் படிப்போர் மனதில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூல் வாசக பாடமாகவும் சமய பாடமாகவும் ஆண் பெண் பாடசாலைகளில் போதிக்கப்படல்வேண்டும். இந்நூல் சிறுவர், சிறுமியர் உள்ளத்தைக் கவரத்தக்கவாறு எழுதப்பெற்றிருப்பது பாடசாலை அதிகாரிகள் கவனிக்கத்தக்கது.

---

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

# சிவகுமாரன்

## அல்லது

# கொலைஞன் யார்?

ஆரம்ப முதல் ஈறுவரையில் படிப்பவர் மனத்தைத் தன் வயப்படுத்தி மயக்கும் ஓர் சரிதை. இனியதும் எளியதுமான தமிழ்நடையில் எழுதப்பெற்றது. இப்புதிய நவீனம் அளவற்ற ஆனந்தத்தையும் பெறவரிய நற்போதகங்களையும் படிப்போரனைவருக்கும் அளிக்கவல்லது. வனப்பிற் சிறந்த இதன் கதாநாயகி தனது தாய்தந்தையரும் உடன்பிறந்தாரும் வறுமையிற் பட்டு வருந்துவதைக் கண்டுமனம்வெதும்பி அவர்கள் கொடுமைகளைத் தீர்க்கப்பொருள்பெறும் நோக்கத்துடன், தன் இளமைப்பருவத்தின் காதலனைத் துறந்து தனவந்தனொருவனை மணந்து, தான் நன்னெறி வழுவாதிருந்தும் தன்மீது சந்தேகங்கொண்ட புருஷன் மரண காலத்தில் தன்னை வறுமையில் மடிக்கச்செய்த சூழ்ச்சியைப் பாழ்படச்செய்ய அயோக்கிய சிகாமணியான ஒரு வக்கீலின் உதவியை நாடுகிறாள். கதியில்லாத அவளது கஷ்டதசையை, தான் இலாபமடையும் சந்தர்ப்பமாகக் கொள்ள வெண்ணி, அவன் தன் நுட்ப புத்தியினால் அவளை மாற்றித் தன் அடிமையாக்கிக் கொள்ளுகிறான். பேதைமைப் பெண்ணின் புத்தி கூர்மைபெற்று, அவளை அவன் வலையிற் சிக்காது காப்பாற்றுகிறது. அவ்வக்கீல் எப்படியோ துர்மரணமடைகிறான். அவனைக் கொன்றவர் யாரென்பது எவரும் அறியவொண்ணாத மர்மமாயிருக்கிறது. கதாநாயகியும் அவளுடைய பழைய காதலனும் ஒருவரையொருவர் சந்தேகிக்கின்றனர். அவளுடைய காதலன்பேரில் குற்றஞ்சாட்டப்பட்டு நியாயசபையில் அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்போகும் தருணத்தில் அன்பின் மிகுதியினாலும், அதி நுட்ப புத்தியினாலும் நிசமான கொலைஞனைக் கண்டுபிடித்த சிநேகிதனொருவன் அக்கொலைஞனை ஆஜர்செய்து கதாநாயகனைக் காப்பாற்றுகிறான். படிக்கப் படிக்க ருசியாயிருக்கும், காப்பிக்கு முந்துங்கள்.

**மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.**

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

# பஞ்சரத்தினம் :: அணா 12

(ப. சி. கோவிந்தசாமி ராஜா இயற்றியது.)

### சில முக்கிய அபிப்பிராயங்கள்

தேசபக்தன்.—பஞ்சரத்தினத்தின் உள்ளுறை பொன்னேபோல் போற்றத்தக்கது. இந்நூல், படிப்போர் உள்ளங் கவருமாறு செவ்விய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

சுதேசமித்திரன்.—இனிய நடையில் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு எழுதப்பட்டிருக்கிறது. ஸ்திரீ புருஷர்கள் இருவரும் யாதொரு வித்தியாசமுமின்றி படிப்பதற்கேற்ற புத்தகம் இதுவே.

**P. A. Subramania Aiyer Esq., Head Master,** *Hindu High School, Triplicane* —" " It is *written in very good style* " " I have prescribed it as a Text-book for non-detailed study for the III Form in my school.

**S. Anavaratavinayakam Pillai Esq., M. A., L. T.**— " " Another good feature of the book is *that it is free from errors and written in an elegant style and as such is well adapted for use in schools as a Text-book.*

**T. Kanakasundaram Pillai Esq., B. A.**—" " It is written in good readable Tamil and may *be prescribed for non-detailed study in the higher forms of Secondary Schools.*

**The Hindu.**—It is a book which inculcates with illustrations the sacred principles of *truth, charity, chastity* and devotion to all that is good and noble.* The get-up of the book is distinctly good.

**The Madras Mail.**—" " *It ought to be of peculiar interest to the youth of India.*

**New India.**—" " *Written in elegant and intelligible Tamil.* The Hon'ble Mr. Justice Kumaraswami Sastri writes a foreword in the course of which he recommends the book to the youth of both sexes in particular and to the public in general.

**மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.**

178155

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

# வியாஸ விதானம்

இது

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர், பீ.ஏ., எல்.டி.,

அவர்கள் இயற்றியது.

பசு, விகடப் பறவை, புலி, தென்னைமரம், கடிகாரங்கள், காவிரி, விடுமுறை யாத்திரை, வீடுநெருப்புப்பற்றி எரிதல், வித்தியாரணிய சுவாமிகள், மைகேல் பாரடே, தர்மாபிலேக் காவல், சிவாஜியும் அப்ஜால் கானும், ஆறுகள், தபால் ஒழுங்கு, கம்பியில்லாத தந்தி, பள்ளிக்கூடபூர்ண ஏற்பாடு, பழகப் பழகப் பாலும் புளிக்கும், குரங்கு கையில் பூமாலை அகப்பட்டாற்போல, ஜீவகாருணியம், பொய்யுரைத்தல், மிதச்செலவு, போட்டி, மனோராஜ்யம், கம்பர், வொர்ட்ஸ்வொர்த், சீதோஷ்ண ஸ்திதியும், மனோநிலையும்.

இவை முதலாகிய விஷயங்களைப்பற்றிய அ(
மையான வியாஸங்கள் கொண்டது. சித்திரப்பட
அடங்கியுள்ளது. மாணவர்களுக்கேற்ற புத்தகமெ
துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. அணா 12

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை